# நவமலர்






வெளியீடு
இந்து இளைஞர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்
2016



உ

சிவஞான வைரவர் துணை







# நவமலர்

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## இந்து இளைஞர் கழகம்,
## வருடாந்த விஜயதசமி வெளியீடு

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**துர்முகி வருடம் புரட்டாதி மாதம் 25 ஆம் நாள்**

**11.10.2016**

உ

சிவஞான வைரவர் துணை



Om Saraswathi Namasthubyam, Vardey
Kaamarpuini, vidhyarambham
Karishyami, Siddhir bhavathu mey sada

- இந்து இளைஞர் கழகம் -

உ

சிவஞான வைரவர் துணை



யாழ் இந்துக்கல்லூரி

# சிவஞான எழுந்தருளி வைரவர்

உ
சிவமயம்

## ஸ்தாபகர் கீதம்

இராகம் : லதாங்கி

நாவலரின் சிந்தனையை மனத்துள் வாங்கி
பாசுபதியார் நாகலிங்கம் இணைவின் பெயரால்
வையகமே புகழ்ந்திடவே வளர்க என்று
வைத்து பெரும் கற்களால் உருவானதே எங்கள் இந்து

பாடல் ஆக்கம் :
திரு. பொ. ஞானதேசிகன்

இசையமைப்பு :
திரு. கி. பத்மநாதன்
இசை ஆசிரியர்

## மகுட வாக்கியம் (Motto)

*"கற்க கசடறக் கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

## இந்துவின் நோக்கக் கூற்று (Vision)

*அறமும் அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க இந்துப் பண்பாட்டுச் சமூகத்தை கட்டியெழுப்புதல்*

Buildings up an Ethically, Literally and Virtuously Bound Hindu Traditional Society

## இந்துவின் பணிக்கூற்று (Mission)

*சர்வதேச மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் தேர்ச்சியும் செயல்திறனும்,*
*சுதேசியப்பற்றும் கொண்ட நற்பிரஜைகளை இந்துப் பண்பாட்டு வழியாக உருவாக்குதல்.*

Producing well Disciplined Citizens Possessing Necessary Skills, competence, Humanity and Patriotism required to Copy with Universal Changes, Bound Hindu Traditional Society.

**உள்ளே...**


| | | |
|---|---|---|
| 01. | பஞ்சபுராணம் | 1 |
| 02. | சிவபுராணம் | 4 |
| 03. | சகல கலா வல்லிமாலை | 8 |
| 04. | கௌரி காப்பு | 12 |
| 05. | ஸ்ரீ லிங்காஷ்டகம் | 16 |
| 06. | மாணவர்களின் பார்வையில் பவத்கீதை | 17 |
| 07. | கோழைகளுக்கல்ல, இந்த உலகம் | 20 |
| 08. | நாவலர் வாழ்வில் முக்கிய நாள்கள் | 22 |
| 09. | நாவலர் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சில சம்பவங்கள் | 28 |
| 10. | அறுபத்து மூன்று நாயன்மார் | 34 |
| 11. | நவராத்திரி விழாக்காலம் | 36 |
| 12. | தாய் தந்தையைப் பேணல் | 40 |
| 13. | "நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகவே நீ மாற்றங் காண்பாய்" | 41 |
| 14. | விபூதி வாங்கும் முறை | 44 |
| 15. | பகவத்கீதையைப் பற்றிய சில உண்மைகள் | 45 |
| 16. | சொற்பொழிவாளர்கள் | 48 |
| 17. | சரஸ்வதியின் லட்சணம் | 49 |
| 18. | அவரவர் விரும்பிய வண்ணம் எல்லாம் தருபவள் அபிராமி | 52 |
| 19. | கௌரவிப்பு | 53 |
| 20. | இந்து இளைஞர் கழகத்தின் ஊடாக சிவஞான வைரவப் பெருமானின் சங்காபிஷேகத்துக்கு நிதி உதவி, பொருளுதவி வழங்கிய அடியார்களின் விபரம் - 2016 | 54 |

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
# இந்து இளைஞர் கழகம்
# உறுப்பினர்கள் - 2016

JAFFNA HINDU COLLEGE

**புரவலர்** – திரு. ஐ. தயானந்தராஜா (அதிபர்)
**துணைப்புரவலர்** – திரு. ச. நிமலன் (பிரதி அதிபர்)
**பெருந்தலைவர்** – திரு. ஆ. ந. தேவசகாயம் ஜெயகுமார் (ஆசிரியர்)
**பெருச் செயலாளர்** – திரு. வி. ஜெனகன் (ஆசிரியர்)
**பெரும் பொருளாளர்** – திரு. த. நிஷாந்தன் (ஆசிரியர்)

**தலைவர்** – செல்வன் ஸ்ரீ. பிரணவன்
**செயலாளர்** – செல்வன் ச. சாயகான்
**பொருளாளர்** – செல்வன் சா. பிரவீன்
**உப. தலைவர்** – செல்வன் கோ. பானுஜன்
**உப. செயலாளர்** – செல்வன் வி. சிவப்பிரியன்
**விழா அமைப்பாளர்** – செல்வன் ஆ. வாகீசன்
செல்வன் இ. கிருஷாந்தன்
செல்வன் ப. பவதாரகன்
**பத்திராதியர்** – செல்வன் பு. ரவிஷாந்

**ஆலோசனைக்குழு**
திரு. சி. ஜெயபாலன்
திரு. ஆ. நவநீதகிருஷ்ணன்
திருமதி. ஜெ. சத்தியமாலினி
திரு. பா. சற்குணராஜா
திரு. க. சுவாமிநாதன்
திரு. ந. விபுலன்
திரு. தி. சிவகுமாரன்
திரு. ச. அகிலன்
செல்வி அ. காயத்திரி



இந்து இளைஞர் கழகம் - 2016

## கல்லூரியில் 2016 இல் இற்றைப்படுத்திய சமய நிகழ்வுகளின் சில பதிவுகள்...









# ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மிக நீண்ட வரலாற்றைக் கொண்டு விளங்கும் பாடசாலை. இந்தக் கல்லூரி இந்து சமயத்தையும் தழிழையும் இரண்டு கண்களாக போற்றி வருகின்றது. இளைய சமூகத்து நல்வழியை சிறப்பாக வழிபடுத்தி வருகின்றது. இந்து இளைஞர் கழகம் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது என்றால் அது மிகையாகாது நவராத்திரி காலத்தில் வருடந்தோறும் நவமலர் எனும் நூல் வெளியிடப்படுவது மிகவும் வரவேற்கத் தக்க விடயம் இந்நூல் சிறப்பாக அமைய இறைவன் தாழ்பணிகிறேன். மேலும் இந்து இளைஞர் கழகத்தின் நவமலர் தொடர்ந்து வெளிவர இறைவனின் நல்லாசி கூறி அமைகிறேன்.

தொண்டர் பணி சிறக்க ஞானவைரவர்
பாதம் பணிகின்றேன்

**பிரம்மஸ்ரீ க. நிரஞ்சனசர்மா**
*ஆலய நித்திய சிவாச்சாரியார்*
*சிவஞான வைரவர் ஆலயம்,*
*யாழ். இந்துக் கல்லூரி.*

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் கழத்தினால் ஆண்டுதோறும் விஜயதசமி நன்நாளையொட்டி "நவமலர்" என்ற நாமம் தாங்கிய சிறப்பு மலர் வெளியிடப்படுவதையிட்டு வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

அன்பு, பொறுமை, சாந்தி, சமாதானம், கருணை போன்ற நற்பண்புகள் மனிதகுலத்திதை வளம் பெறச் செய்யும் உயர் சத்திகளாகும் ஆனால் அவற்றை விலை கொடுத்து வாங்க இயலாது ஏன்னனில் அவை மனிதனின் புறத்தே அல்லாது அவனது அகத்தேயே உள்ளன அகத்தே உள்ள அச்சத்திகளை வெளிப்டுத்த வழிகாட்டுதலே சமயத்தின் நோக்கமாகும். இதைத்தான் "உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" என்கிறார். திருநாவுக்கரசு சுவாமிகள். எமது சமயத்தின் உயர்ந்த விழுமியக் கருத்துக்கள் மாணவர்களைச் சென்றடைந்து அவர்களது வாழ்க்கை வளம் பெற உதவும் வகையில் இம் மலர் நல்வழியில் பயணிப்பதற்கு திசை முகப்படுத்தும் பயன்மிகு பணியினை ஆற்றுவது குறித்து மகிழ்ச்சியடை கின்றேன். இது இந்து இளைஞர் கழத்தின் வினைத்திறன் மிகு செயற்பாட்டின் இன்னொரு பரிமாண மாகும். இப் பணியில் முன்னின்று உழைத்த இந்து இளைஞர் கழகத்தினரை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**திரு. ஐ. தயானந்தராஜா**
*அதிபர்*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் இந்து இளைஞர் கழகம் வருடா வருடம் விஜயதசமி "நவமலர்" வெளியீட்டில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்த நவமலர் வெளியீடானது எமது இந்து அன்னையின் பெருமைக்கு மேலும் மெருகூட்டும் நிகழ்வாக அமைகின்றது.

நவமலரானது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் எழுத்தாற்றல்களையும் தாமாகவே விடயங்களை தேடும் ஆற்றலையும் வளர்த்துவிடும் ஒரு நல்ல செயற்பாடாக இம்மலர் வெளியீடு அமையும் என்பதில் மிகுந்த நம்பிக்கை எனக்குண்டு.

மாணவர்களின் திறன்களை வளர்த்து விடுவதிலும் சமய நம்பிக்கைகளை போதிப்பதிலும் உயர் விழுமியங்களைப் போற்றி இறை பக்தியை ஊட்டுவதிலும் கழகத்தின் பணியை பாராட்டுகின்றேன்.

இம்மலர் வெளியீடு சிறப்பாக நடைபெற என் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ச. நிமலன்**
*பிரதி அதிபர்*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இந்து இளைஞர் கழகத்தினால் வெளியிடப்படும் "நவமலர்" விஜயதசமி வெளியீட்டிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகின்றேன்.

மாணவர்கள் சமூகத்தின் நற்பிரஜைகளாக உருவாகவேண்டும் என்றால் அது இறைநம்பிக்கை ஊடாக செயல்படத்த முடியும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

அந்த வகையில் சமய அனுட்டானங்களை நெறிப்படுத் கின்ற இந்து இளைஞர் கழகம் இப் பாடசாலையில் சிவஞானவைரவர் பூசை, வருடாந்த கும்பாபிஷேக தின சங்காபிஷேகம், சிவராத்திரி விழா, நவராத்திரி விழா, விஜயதசமி, மாதாந்தப் பரணிப் பூசை, ஏடு தொடக்குதல், சிவதொண்டர் அணி, தீட்சை அளித்தல் போன்றன மாணவர்களிடையே சமய நம்பிக்கைகளையும், சமய போதனைகளையும் ஆற்றுகின்ற பணி சிறப்பானதாகும்.

இந் நவமலர் வெளியீடு மிகவும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல சிவஞானவைரப் பெருமானின் அருளும் கிடைக்க எனது மனப் பூர்ர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு. தி. சந்திரகுமார்**
*பிரதி அதிபர்*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

# பெருந்தலைவரின் உள்ளத்திலிருந்து



யாழ். இந்துக் கல்லூரியின் பாரம்பரிய பண்பாடு விழுமியச் செயற்பாடுகளின் வெளிப்பாடாகவும் ஆசிரியர்கள், மாணவர்களின் கல்லூரி வாழ்வின் வரலாற்று ஆவணப்பதிவாகவும் "நவமலர்" விளங்குகின்றது.

இந்து இளைஞர் கழகத்தின் செயற்பாட்டில் நவமலர் வெளியீட்டில் உந்து சத்தியாக இருந்து எம்மை ஊக்குவித்த எமது கல்லூரியின் அதிபர் உயர்திரு. ஐ. தயானந்தராஜா அவர்களுக்கு எமது கழகம் என்றும் நன்றிப் பெருக் குடையது.

இந்து இளைஞர் கழகத்திற்கு எந்த வேளையிலும் உறுதுணையாக பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்விசார உத்தியோகத்தர்கள் முன்னைய காலப் பகுதியில் கல்லூரியில் சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவ சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அவர்களுக்கும் இந்து இளைஞர் கழகத்தின் நன்றியினைத் தெரிவித்து இவ் நவமலர் தொடர்ந்த வெளிவர எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானின் இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

சுபம்

**திரு. ஆ. ந. தேவசகாயம் ஜெயகுமார்**
*பெருந்தலைவர்*
*இந்து இளைஞர் கழகம்*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

# தலைவரின் இதயத்திலிருந்து



கல்வியுலகில் பல பெருமை மிகு சாதனைகளை தடம் பதித்த எமத இந்துக் கல்லூரித் தாயின் கரங்களில் அண்டு தோறும் தவழ்ந்துவரும் விஜயதசமி வெளியீடான "நவமலர்" இம்முறை யும் மலர்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சமயத்தின் உன்னதமான கருத்துக்களைக் கூறுவதே இம் மலரின் நோக்கமாகும். அந்த வகையில் 2016 இல் எமது கழகத்தினால் நேசகரங்களை பற்றியபடி முனைப்போடு இவ் நவமலர் உங்கள் கரங்களில் தவழவிடப் பட்டிருக்கின்றது.

இந்து மதம் கூறும் அடிப்படைத் தத்துவத்தின் பிரகாரம் எம்மை நாம் முழுமையாக இறைவனிடம் ஒப்புவித்து அவனை அனுதினம் வழிபட்டு மன ஆசைகளை அகற்றுவோமானால் அகமகிழ்ச்சி மனஅமைதி, சுகவாழ்வு ஆகியவை வளர்த்து பிறவிப் பெருங்கடலைக் கடக்கக்கூடிய பக்குவம் எமக்கு ஏற்படுவது திண்ணம்.

அந்த வகையில் தரம்மிக்க பல கருத்துக்களை உள்ளிட்ட ஆக்கங்களை தாங்கி வெளிவந்து மணம் பரப்பும் நவ மலரை அனைவரும் படித்து மன அமைதி பெற வேண்டு மென்பதே எமது அவாவாகும்.

**செல்வன் ஸ்ரீ .பிரணவன்**
*தலைவர்*
*இந்து இளைஞர் கழகம்*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*




2016 ஆம் ஆண்டு இந்து இளைஞர் கழக அங்கத்துவ உறுப்பினர்கள்




2016 ஆம் ஆண்டு இந்து இளைஞர் கழக அங்கத்துவ உறுப்பினர்கள்

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லன்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினர் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்றுமுதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

"எல்லாம் சொற்படி வித்தை"
"அப்படியே உள்ளது"
"ஒரு பொல்லாப்பும் இல்லை"
"முழுவதும் உண்மை"
"ஒருவருக்கும் தெரியாது"

- செல்லப்பா சுவாமிகள் -

உ
சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த
# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்.**

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க*
*வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க*
*புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க*
*கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க*
*சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க*

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்துஅறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ ஆதிகுமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த
## சகல கலா வல்லிமாலை



திருச்சிற்றம்பலம்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

*1.* *வெண்டா மரைக்கன்றி நின்பதந்*
*தாங்கவென் வெள்ளை யுள்ளத்*
*தண்டா மரைக்குத் தகாது கொலோ*
*சக மேழுமளித்*
*துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக*
*வுண்டாக்கும் வண்ணம்*
*கண்டான் சுவை கொள் கரும்பே*
*சகல கலாவல்லியே.*

*2.* *நாடும் பொருட்சுவை சொற்சுவை*
*தோய்தர நாற்கவியும்*
*பாடும் பணியிற் பணித்தருள்வாய்*
*பங்க யாசனத்திற்*
*கூடும் பசும்பொற் கொடியே*
*கனதனக் குன்று மைம்பாற்*
*காடுஞ் சுமக்குங் கரும்பே*
*சகல கலாவல்லியே.*

3. அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# கௌரி காப்பு



திருச்சிற்றம்பலம்

காப்பு

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின்று அருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின் னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளைஅற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியாரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியாரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனிற்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வும் உண்டு
எச்சகத்தி லுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளுக்கு கூறிய மகாவாக்கியங்கள்

"முழுவதும் உண்மை"
"எப்பொழுதோ முடிந்த காரியம்"
"ஒரு பொல்லாப்பும் இல்லை"
"நாம் அறியோம்"



# ஸ்ரீ லிங்காஷ்டகம்



ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமமதஹ்ம கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுஸராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூசித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராபரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

**ஸ்ரீமத் சங்கர பகவத்பாத சுவாமிகள்**

# மாணவர்களின் பார்வையில் பகவத்கீதை



பகவத்கீதை ஒரு ஞானச்சுரங்கம். வாழ்க்கைக்குத் தேவையான பண்பு நலன்கள் அதில் வலியுறுத்தப் படுகின்றன. மக்களால் அதிகமாகப் படிக்கப்பட்ட ஆன்மீக நூல் பகவத்கீதையே. கீதையில் கூறப்பட்ட பண்புகள் பல மக்களுக்கு வாழ்க்கை முறையாகவே உள்ளது. இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் உள்ள கல்வியாளர்கள், சிந்தனை யாளர்கள், ஆன்மீகவாதிகள், தலைவர்கள், அறிவியல் அறிஞர்கள், சாத கர்கள் மற்றும் பொதுமக்கள் முதலிய அனைவருக்கும் பகவத்கீதை சக்தி, தன்னம்பிக்கை, பலம் முதலியவற்றை அளிக்கும் நூலாகத் திகழ்கின்றது. இந்தியா இவ்வுலகிற்கு அளித்த நன்கொடைகளில் முதன்மையானது பகவத்கீதை என்றால் அது மிகையாகாது.

இருந்தாலும், மாணவர்களிடம் இது இன்னும் அவ்வளவாகப் பிரசித்தி அடையவில்லை. மாணவர்கள் பலருக்கும் கீதை என்பது ஒரு புதிராகவே உள்ளது. சிலர் அதன் பெயரைக் கேள்விப்பட்டுள்ளனர்; சிலருக்கு அது மகாபாரதத்தில் உள்ளது என்று தெரியும்; அவ்வளவே! ஆனால் கீதை தங்களுடைய

வாழ்க்கைக்குத் தேவையான ஒரு செய்தியைத் தாங்கியுள்ளது என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை. மேலும், கீதை மாணவர்களால் அடையமுடியாத ஏதோ 'உயர்ந்த ஒன்றைப்' பற்றிப் பேசுகிறது என்ற உணர்வும் உள்ளது; அவர்களுக்கு கீதையிடம் 'பக்தி' இருந்தாலும் அதைப் புரிந்து கொள்வது கடினம் என்றே எண்ணுகின்றனர்; அதைப் படிப்பதையும் விட்டுவிடுகின்றனர்; அல்லது 'சரியான நேரம்' வரும் வரை படிப்பதைத் தள்ளிப் போடுகின்றனர்; அந்த 'சரியான நேரம்' வருவதேயில்லை!

போட்டிகளும் போராட்டங்களும் நிறைந்த இன்றைய வாழ்க்கைச் சூழலில், 'கீதை எங்களுக்கு என்ன செய்தியைக் கூறுகிறது?' என்று மாணவர்கள் கேட்கின்றனர்.

தற்கால கல்விமுறை இந்தக் கேள்விக்குச் செவிசாய்க் கவில்லை; கைபேசிகள், எஸ். எம். எஸ்கள், வலைத்தளங்கள், மின் அஞ்சல்கள், புகைப்படக்கருவிகள், ஐ பாட்கள், தொலைக்காட்சிகள் மற்றுமுள்ள பலவகைச் சாதனங்களின் தாக்கத்தால் இன்றைய மாணவர்கள் பலவிதமான அக மற்றும் புறப் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. வெளியிலிருந்து ஏற்படும் கவன ஈர்ப்புகளால் மாணவர்கள் தங்களது படிப்பில் கவனம் செலுத்த முடிவதில்லை; இதிலிருந்து விடுபட புறப்போராட்டங்கள் தோன்றுகின்றன. சரியான லட்சியம் இல்லாதது, ஒருமைப்படாத மனம், மற்றவர்களின் தாக்கங்களைச் சந்திப்பது இப்படியாக பலவழிகளிலும் உள்ள குறைகளை நீக்குவதற்கு அகப் போராட்டங்கள் தோன்றுகின்றன; இதனால் நல்ல மனிதனை உருவாக்கும் உயர்ந்த பண்புகளான உண்மை, நேர்மை, சுய நலமற்ற தன்மை, நன்றியுடன் இருத்தல், தன்னடக்கத்துடன் இருத்தல், தியாகம், நன்னடத்தை முதலியன ஓரம் கட்டப்படுகின்றன. ஆசிரியர்களும், பெற் றோர்களும் மற்றும் மாணவர்களிலும் சிலர் தங்கள் வாழ்க்கையின் இத்தகைய போக்கையும் நடத்தையையும் கண்டு மிகவும் வருந்துகின்றனர்.

இதுபோன்ற இளைஞர்களுக்காக பகவத்கீதையில் பல செய்திகள் உள்ளன. மாணவப் பருவத்திலிருந்து வளர்ச்சி பெற்று பொறுப்புள்ள ஒரு மனிதனாக ஆகக்கூடிய நிலையில் உள்ளவர்கள் அனைவருக்கும் காலத்திற்கு ஏற்றவாறு வழிகாட்டக்கூடிய பலசெய்திகள் கீதையில் உள்ளன. கீதை மிகவும் ஆழ்ந்த தத்துவங்களை மட்டுமே உள்ளடக்கிய ஒரு புத்தகம் அன்று; அது நடைமுறைக்குத் தேவையான கருத்துக்களையும் உள்ளடக்கியது. மாணவர்கள் அதைப் படிப்பதன்மூலம் நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

கீதையை நன்றாகப் படிப்பதன் மூலம் ஒருவன் நல்ல மாணவனாகிறான்; நல்ல மனிதனாகிறான். மனிதனின் உண்மை இயல்பு, மனதை ஒரு முகப்படுத்துதல், தீய எண்ணங்களிலிருந்து விடுபடுதல், கோபத்திலிருந்து விடுபடுதல், வாழ்க்கைப் பற்றிய சிறந்த கண்ணோட்டம், நல்ல மனிதனாக வளருதல் முதலிய வளர்ச்சிக்குத் தேவையான வற்றைப் பற்றிய ஆலோசனைகளை வழங்குவதுடன் அது ஒரு நல்ல வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

இந்த நூல் கீதை கூறும் செய்திகளை மாணவர்களின் நோக்கில் வழங்குகிறது. மாணவர்களே, இந்நூலைப் படிக்கும்போது, மனிதன் கண்டறிந்த சிறந்த உண்மை களையும் கருத்துக்களையும் கீதை எவ்வாறு போதிக்கின்றது என்பதையும், அந்தக் கருத்துக்கள் எப்படி உங்களது தனிப்பட்ட வாழ்வையும், சமுதாய வாழ்வையும் திடப்படுத் துகிறது என்பதையும் காண்பீர்கள். மேலோட்டமாகப் பார்த்தால் கீதைகூறும் கருத்துக்களின் சிறப்பைக் காணலாம்; ஆழமாக மீண்டும் மீண்டும் நன்றாகச் சிந்தித்துப் புது படித்தல், அது ஆழமான பல அர்த்தங்களைக் கொடுக்கும்.

**செல்வன் ஸ்ரீ பிரணவன்**
தலைவர்
இந்து இளைஞர் கழகம்

## கோழைகளுக்கல்ல, இந்த உலகம்

நரேனின் உள்ளமும் உடலும் வலிமையானவை.

அவன் உடற்பயிற்சிக்கூடம் ஒன்றிற்குத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தான். அங்கு எல்லாவிதமான பயிற்சிகளையும் மேற் கொள்வான். உடற்பயிற்சியில் அவனுக்கு இருந்த ஆர்வத்தையும் திறமை யையும் கண்டு அதன் நிர்வாகப் பொறுப்பு அவனிடமே கொடுக்கப் பட்டிருந்தது.

ஒருநாள் நரேனும், அதாவது பயில்வான் நண்பர்களும் 'ட்ரபீஸ்' என்ற உடற்பயிற்சி சாதனத்தைக் கூரையில் பொருத்திக் கொண்டிருந்தார்கள்.



பளு மிகுந்த ட்ரபீஸைச் சிறுவர்கள் கஷ்டப்பட்டுப் பொருத்துவதைக் காணக் கூட்டம் கூடிவிட்டது. அந்தக் கூட்டத்தில் ஓர் ஆங்கிலேய மாலுமியும் இருந்தார்.

சிறுவர்கள் ஆ . . . ஊ . . . என்று கூவிக்கொண்டே ட்ரபீஸ் சாதனத்தை மேலே ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவு பெரிய பளுவைத் தூக்கவே முடியாமல் அவர்கள் திணறினார்கள். அப்போது திடீரென்று ஐயோ, அது கீழே விழுந்துவிட்டது.

துரதிஷ்டவசமாக அந்தச் சாதனம் அங்கு வந்திருந்த ஆங்கிலேய மாலுமி மீது விழுந்து விட்டது. அவ்வளவுதான், அவர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

ஓர் ஆங்கிலேயர் அடிமை மக்களான இந்தியர்களின் அஜாக்கிரதையால் மயக்கம் வரும் அளவிற்கு அடிபட்டார் என்றால், அது பெரிய அரசாங்கக் குற்றம் அல்லவா? அதனால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் உடனே ஓடிவிட்டது.

நரேனின் சில நண்பர்களும் ஓடிவிட்டார்கள். இப்படிப் பட்ட சிக்கலான சமயத்திலும் நரேன் தைரியம் இழக்கவில்லை. மிஞ்சியிருந்த சில நண்பர்களுடன் காயமடைந்த ஆங்கிலேயருக்கு முதலுதவி செய்தான். தன் ஆடையைக் கிழித்துக் காயத்தின் மீது கட்டினான். முகத்தின் மீது நீர் தெளித்தான். மெல்ல விசிறினான்.

மாலுமிக்கு மயக்கம் தெளிந்தது. நரேனும் அவனது நண்பர்களும் கைத்தாங்கலாக அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள். ஒரு வாரத்தில் அவர் குண மடைந்தார்.

ஆஸ்பத்திரியிலிருந்து அந்த ஆங்கிலேயர் வீடு திரும்பும்போது அவரிடம் நரேன் ஒரு சிறு பணமுடிப்பைக் கொடுத்தான். அந்தப் பண முடிப்பு நரேந்திரனும் அவனது நண்பர்களும் அந்த ஆங்கிலேயருக்காகத் திரட்டியது.

இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல; இங்கிருந்து நீ தப்பி ஓட முயலாதே என்ற நரேனின் பின்னாளைய கூற்று அவரது சிறு வயதில் எவ்வளவு பொருத்தமாக உள்ளது பாருங்கள்!

இந்த உலகம் மிகப்பெரிய ஓர் உடற்பயிற்சிக்கூடம். இங்கு நாம் நம்மை வலிமை உடையவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கின்றோம்.

-சுவாமி விவேகானந்தர்-

**செல்வன் கோ. பானுஜன்**
உப தலைவர்
இந்து இளைஞர் கழகம்

# நாவலர் வாழ்வில் முக்கிய நாள்கள்

| | |
|---|---|
| **1822, மார்கழி 18** | சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை இரவு அவிட்ட நட்சத்திரத்தில் ஆறுமுகநாவலர் பிறந்தார்; தந்தையார்: ப. கந்தப் பிள்ளை; தாயார்; சிவகாமியார். |
| **1827** | வித்தியாரம்பம்; நல்லூர் சுப்பிரமணிய உபாத்தி யாயர்; நல்லூர் வேலாயுத முதலியார் |
| **1834 ஆவணி** | யாழ். வெஸ்லியன் மிசன் கல்லூரி (பின்பு யாழ்.மத்தியகல்லூரி) யில் ஆங்கிலம் கற்கச் செல்லல். |
| | இருபாலை நெ. சேனாதிராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப்புலவர் ஆகியோரி டம் தமிழ் கற்றல். |
| **1841** | யாழ்.வெஸ்லியன் மிசன் கல்லூரியில் தமிழ், ஆங்கில ஆசிரியர்; பேர்சி வலின் வேதாகமத் திருப்புதலுக்குத் (பைபிளை மொழிபெயர்த்தல்) தமிழ்ப் பண்டிதராக இருத்தல். |
| **1842** | தந்தை மரணம் |
| **1846 தை** | சைவ சமயப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லல். |

| | |
|---|---|
| **1847, மார்கழி 31** | *பிலவங்க - மார்கழி, 18: வண்ணை வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபத்திலே சைவப் பிரசங்கம் தொடங்குதல்.* |
| **1848** | *முதல் இந்திய பிரயாணம்; வேதாகம (பைபிள்) மொழிபெயர்ப்பை ஒப்புவித்து அச்சிடுவிக்கப் பேர்சிவலுடன் செல்லல்.* |
| **1848 ஆவணி** | *கீலக - ஆவணி 5 : வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தல்.* |
| **1848 புரட்டாதி** | *பேர்சிவலிடம் பார்த்த தமிழ்ப் பண்டிதர் வேலையைத் துறத்தல்.* |
| **1849 ஆடி** | *சௌமிய - ஆடி; இரண்டாம் இந்திய பிரயாணம்; அச்சியந்திரம் வேண்டச்செல்லல்; வேதாரணியத்தில் மேளதாளத்துடன் வரவேற்பு.* |

**நாவலர்** *பட்டம் திருவாவடுதுறை ஆதீனம் அளித்தல்.*
**சூடாமணி நிகண்டுரை, சௌந்தரியலகரியுரை, பதிப்பு**
*வித்தியா நுபாலனயந்திரசாலை நிறுவுதல்.*

| | |
|---|---|
| **1850** | *1, 2, 4 - ஆம் பாலபாடங்கள் இயற்றியது.* |
| **1851 சித்திரை** | *கொலை மறுத்தல்.* |
| **1851 ஐப்பசி** | *நன்னூல் விருத்தியுரை.* |
| **1851** | *திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை, சிவாலயதரிசன விதி இயற்றியது.* |

| | |
|---|---|
| **1852** | பெரியபுராண வசனம் |
| **1853** | வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச சபை தாபிதம். சுப்பிரபோதம் |
| **1854** | சைவதூஷண பரிகாரம் |
| **1854 ஐப்பசி** | மூன்றாவது இந்திய பிரயாணம்; இல்லறத்தை மேற்கொள்ள விரும்பாது சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொள்ளும்படி செல்லல். |
| **1855** | வெஸ்லியன் மெதடிஸ்த ஆண்டறிக்கையில் சைவதூஷண பரிகாரத்துக்கு பாராட்டு. |
| **1856** | வால்டன் பாதிரியுடன் கடிதங்கள் மூலம் வாதம். |
| **1857 மார்கழி** | தாய் மரணம். |
| **1858 ஆனி** | நான்காவது இந்திய பிரயாணம்; சென்னையில் வித்தியாநுபாலன அச்சியந்திரசாலை தாபித்தல்; பொன்னுச்சாமித் தேவர் நட்பு. |
| **1859 வைகாசி** | திருவாசக மூலமும் திருக்கோவையார் மூலமும் பரிசோதித்து க. சதாசிவப்பிள்ளை பேரால் வெளியிடல். |
| **1860 வைகாசி** | திருக்கோவையார் பழையவுரை. |
| **1861** | திருக்குறள் பரிமேலழகர் உரை; தருக்கசங்கிரகம். (அன்னம்பட்டீயம்) |


| | |
|---|---|
| 1862 பங்குனி | யாழ்ப்பாணம் வருதல். |
| 1862 வைகாசி | சிதம்பரம் சைவ வித்தியாசாலை பொருட்டு வண்ணை சைவ வித்தியாசாலையில் பிரசங்கம். |
| 1862 ஆடி | சிதம்பரம் சைவ வித்தியாசாலை பொருட்டு பருத்தித்துறை சித்தி விநாயகர் கோயில் பிரசங்கம். |
| 1864 தை | ஐந்தாவது இந்தியப் பிரயாணம்; தல யாத்திரை |
| 1864 ஐப்பசி | சிதம்பரம் சைவ வித்தியாசாலை தாபித்தல். |
| 1866 | சேதுபுராணம், இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து, கந்தபுராணம் பதிப்பு |
| 1867 | ஈ.ஜே. றொபின்சன் பாதிரியார் பதிப்பித்த Hindu Pastors எனும் நூலில் நாவலருடைய சமயப் பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 1867 | திருத்தொண்டை நாட்டுப்பதிபுண்ணிய பரிபாலனசபைத் தலைவர், சிறந்த சொற் பொழிவு. |
| 1868 | மேற்படி சபைத் தலைவர்; பிரசங்கங்கள். |
| 1868 | கோயிற்புராணவுரை (தை) சைவசமய நெறியுரை (புரட்டாதி) தொல். சேனாவரையம், பரிசோதனை. |
| 1868 | சிதம்பர விக்கியாபனம் |

| | |
|---|---|
| 1869 மாசி | வீராசாமி முதிலியாரின் "விஞ்ஞானப் பத்திரிகை" நாவலர் மீதும் சி. வை. தாமோதரம் பிள்ளை மீதும் கண்டனம். |
| 1869 மாசி | "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" முதலியாருக்கு நாவலரின் மறுப்பு. |
| 1869 | போலியருட்பா மறுப்பு. |
| 1869 | அருட்பா வழக்கு. |
| 1870 | சிதம்பர விக்கியாபனம். |
| 1870 மாசி | ஆறு வருட இந்தியா வாழ்க்கைக்குப் பின்பு யாழ்ப்பாணம் திரும்புதல் பெரிய வரவேற்பு ஊர்வலம். |
| 1872 | வண்ணை சைவ ஆங்கில வித்தியாசாலை தாபித்தல். |
| 1872 ஐப்பசி | " யாழ்ப்பாணச் சமய நிலை" |
| 1872 - 73 | கோப்பாய், புலோலி, சைவப்பிரகாச, வித்தியா சாலை தாபித்தல். |
| 1875 ஆடி | "நல்லூர் கந்தசுவாமி கோயில்" (முதலாம் பத்திரிகை) |
| 1875 ஆவணி | "நல்லூர் கந்தசுவாமி கோயில் " (இரண்டாம் பத்திரிகை) |
| 1876 தை | " மித்தியாவாத நிரசனம்" |

| | |
|---|---|
| **1876 கார்த்திகை** | யாழ்ப்பாணம் கரையூரில் பேதி நோய். நாவலர் மக்கள் சார்பில் வன்மையான முறையீடு. |
| **1877** | யாழ்ப்பாணத்திற் பஞ்சம்; நாவலர் ஏசண்டு துவைனன் அவர்களைக் கண்டித்தல். |
| **1878 தை** | தேசாதிபதி லோங்டனுக்கு அரசாங்க ஊழல் களைப் பற்றி விண்ணப்பம் அளித்தல். |
| **1878 வைகாசி** | கீரிமலை சிவாலயப் பணி பற்றி விடுத்த வேண்டு கோள். |
| **1879 வைகாசி** | இலங்கைச் சட்ட நிரூபண சபைத் தேர்தலில் பொன். இராமநாதன் அவர்களை ஆதரித்துப் பிரசங்கங்கள் செய்தல். |
| **1879 ஆடி.** | இறுதிப் பிரசங்கம்; சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் குருபூசை. |
| **1879, மார்கழி 2** | (பிரமாதி, கார்த்திகை 18) சுகவீன மேற்படல். |
| **1879 மார்கழி 5** | (கார்த்திகை , 21 ஆம் நாள்) மக நட்சத்திரத்தில் இறையடி சேர்தல். |

**செல்வன் ச. சாயகான்**
**செயலாளர்**
இந்து இளைஞர் கழகம்

# நாவலர் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சில சம்பவங்கள்



### 1. இலங்கை

**1823 பெப்ரவரி 19**

யாழ்ப்பாணத்திலே துண்டுப்பிரசுர சங்கம் (Jaffna Tract Cociety) நிறுவப்பட்டது. கிறிஸ்தவ கொள்கைகளைப் பரப்புவதற்காக ஏராள மான பிரசுரங்கள் இலவசமாக வழங் கப்பட்டன.

**1831- 32**

கோல்புறுாக் ஆணைக்குழுவின் எடுத்துரைகள்: இலங்கையின் சமூக-அரசியல் பொருளாதாரத் துறைகளிற் பல சீர்திருத்தங்களை இக்குழு தகவுரை செய்தது.

**1832**
இராசகாரியம் எனப்பட்ட அரசாங்க சேவை (மானிய முறை) சட்டப்படி நீக்கப்பட்டது. காலத்துக் கோவ்வா இம்முறையை நீக்குமாறு கோல்புறூக் குழு எடுத்துரைத்திருந்தது.

**1832**
கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் தபாற்சேவை தொடங்கப்பட்டது. ஆசியாவிலேயே
தபால்கோச்சு முறை இலங்கையிலேயே முதன் முதலாக அமைக்கப்பெற்றது.

**1832** இலங்கையின் முதலாவது கோப்பித் தோட்டம் கம்பளைக்கண்மையிலுள்ள சிங்கம்பிட்டியில் ஏற்படுத்தப்பட்டது. ஜோர்ஜ் பேர்ட் என்ற வெள்ளைக்காரர் இத்தோட்டத்தின் உரிமையாளர்.

**1833**
கோல்புறூக் செய்த எடுத்துரைக்கு இணங்க முதலாவது சட்ட நிரூபணசபை ஏற்படுத்தப்பட்டது.

**1834**
கோல்புறூக் குழுவின் எடுத்துரை ஒன்றுக்கு இணங்க கவர்னர் வில்மட் ஹோட்டன்(1831-1837) கல்விச்சபை ஒன்றை நிறுவினார். கல்வித் திட்டங்கள் வகுப்பதும், பள்ளிக்கூடங்களைக் கண்காணிப்பதும் சபையின் முக்கிய பொறுப்புக்களாயிருந்தன.

**1834 பெப்ரவரி 4**
கொழும்பிலிருந்த வெள்ளைக்கார வர்த்தகத்தின் முயற்சியால் 'த ஒப்சேவர் அன்ட் கொம் மேர்ஷியல் அட்வெட்டைசர்' (The Observer & Commercial Advertiser)என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. இதனையே சுமார் 90 வருடங்களுக்குப் பின் விஜயவர்த்தனா விலைக்கு வாங்கினார்.

**1837**
வித்தியோதயப் பிரிவேரு நிறுவப்பட்டது.

**1839**
அஸாமிலிருந்து வருவிக்கப்பட்ட தேயிலை விதைகள், பேராதனையில் அரசினர் தாவரவியற் பூந்தோட்டத்திலே பரீட்சார்த்தமாகப் பயிரிடப் பெற்று, வெற்றிகிட்டியது. 1828 ஆம் ஆண்டுக்கு முன்பே தேயிலை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாயினும் அம் முதன் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

**1839**
பெருவாரியாகத் திறக்கப்பட்ட தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்க்குமுகமாக இவ்வாண்டிலிருந்து இந்தியத் தொழிலாளர் வருவிக்கப்பட்டனர்.

**1839 மே22**
கொழும்பில் வணிக மன்றம் நிறுவப்பட்டது. தனியார் வர்த்தகத்தின் துரித வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இம்மன்றம் அமைந்தது.

**1841**
உதயதாரகை பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. மானிப்பாயிலிருந்து ஹென்றி மாட்டின் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இப் பத்திரிகை மாதமிருமுறை பிரசுரமானது. நாவலர் இப் பத்திரிகையில் விவாதங்கள் நடாத்தியிருப்பது மட்டுமன்றி, இதனைப் பல விடயங்களிற் கண்டித்து எழுதியுமிருக்கிறார்.

**1841**
கல்வி ஆய்வுக்குழு நிறுவப்பட்டது. இக்குழுவின் முக்கிய தகவுரை, கிறிஸ்தவ சமயத்தைப் போதனை செய்யும் பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமே அரசாங்க நிதியுதவி செய்ய வேண்டும் என்பதாகும். இதனால் கிறிஸ்தவர்கள் கல்வித் துறையில் பெரிதும் முன்னேற்றமடைந்தனர்.

**1844**
அடிமை முறை (Slavery) சட்டப்படி ஒழிக்கப்பட்டது.

**1846 ஏப்ரல் 26**
அதி. வண. டாக்டர் ஜேம்ஸ் சப்மன் இலங்கையின் முதலாவது

அத்தியட்சகராக நியமனம் பெற்றார். திருச்சபையின் ஆணைப்படி இலங்கை மேற்றிராணியார் இருக்கையாயிற்று.

**1848 ஜுலை 2**

சிலோன் டைம்ஸ் (Ceylon Times) வெளிவந்தது.

**1847**

பிரித்தானியா அரசாங்கம் தேவாலயங்களின் பாலனப் பொறுப்பை, அஸ்கிரிய, மல்வத்தை பிரதம குருமாரிடமிருந்து பறித்து நிலப் பிரபுக்களிடம் கொடுத்து அத்துடன், தலதா மாளிகைக்கு வருடந்தோறும் வழங்கப்பட்டு வந்த முந்நூறு பவுண் அரச மானியமும் நிறுத்தப்பட்டது. அரசாங்கத் திலிருந்து பௌத்த சமயத்தைப் பிரிப்பதே இத்தகைய நடவடிக்கையின் நோக்கமாயிருந்தது.

**1847**

அரசாங்கத்தின் நிதி நெருக்கடி : பல புதிய வரிகள் விதிக்கப்பட்டன. முத்திரை வரி உயர்வு; கப்பல், தோணி, வண்டி, நாய், துவக்கு முதலியவற்றுக்கு வரி; தலைவரி இவற்றால் சுதேதிகள் மாத்திரமன்றி பறங்கியரும், சில வெள்ளைக்காரரும் அதிருப்தியடைந்தனர்.

**1848**

இலங்கையின் சில பகுதிகளிற் கலகங்கள் வெடித்தெழுந்தன; கண்டி, மாத்தளை, குருநாகல், கொழும்பு ஆகியவிடங்களிலே ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. சில பகுதிகளில் அரசாங்கக் கட்டிடங்களையும் வெள்ளைக் கார முதலாளிகளின் இல்லங்களையும் தாக்கிச் சேதப்படுத்தினர். அக்காலத்தில் கவர்னராயிருந்த ரொறிங்ரன் பிரபு (Lord Torrington, 1847 - 1850), படையியற் சட்டத்தை அமுலாக்கித் தேவைக்கதிகமான வன்முறைகளினாற் கலகத்தையடக்கினர். அவ்வாண்டின் பிற்பகுதியிலே பல ஆங்கிலேய மனிதாபிமானிகளது முறையீட்டுக்கிணங்க கலகத்தைப் பற்றி ஆய்வுக் குழுவொன்று விசாரணை நடாத்தியது; பதவி நீக்கப்படும் தறுவாயில் ரொறிங்துரன் பதவியிலிருந்து விலகி இங்கிலாந்த சென்று விட்டான்.

**1858 ஜனவரி 1**

முதன் முதலாக இலங்கையிலே தொலைபேசி (Telephone) சேவை தொடங்கப்பட்டது. முதலில் கொழும்புக்கும் காலிக்கு மிடையே இச்சேவை நடந்தது.

குடியியற் சுகாதாரத் திணைக்களம் ஒன்று அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டு டாக்டர் கிறிஸ்தோபர் எலியற் என்பவர் முதலாவது தலைமை வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பெற்றார்.

**1859**

சைமன் காசிச்செட்டி எழுதிய **தமிழ் புளூர்ட்டார்க்** (tamil Plutarc) என்ற நூல் வெளிவந்தது. இலக்கிய வரலாற்றாய்வுக்கு இது வழிகாட்டியது.

**1866**

பௌத்த சமய மறுமலர்ச்சியாளர் சிலரது பெருமுயற்சியின் விளைவாகக் கொழும்பில் ஆனந்தாக் கல்லூரி நிறுவப்பட்டது.

**1867**

கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் புகையிரதப்பாதை அமைத்து முடிக்கப்பட்டது. இதுவே முதலாவது இரும்புப் பாதை.

**1869**

கல்வித் திணைக்களம் (Department of public Instructions) நிறுவப்பட்டது.

**1870**

பள்ளிக்கூடங்களுக்கு உதவி நன்கொடைத் திட்டம் ஒன்றை (பசயவேள - ைே - யனை) அரசாங்கம் தொடங்கியது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, கிறிஸ்தவ மிசனரிமார் சின்னஞ்சிறு பட்டினங்களிலெல்லாம் கல்விக் கூடங்கள் நிறுவினர்.

**1873**

முதன் முறையாக இலங்கையிலிருந்து வர்த்தக அடிப்படையில் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

**1876**

களனியில் வித்தியாலங்கார பிரிவேனா தாபிக்கப்பட்டது.

**1876**

யாழ்ப்பாணத்திலிருந்து கத்தோலிக்க பாதுகாவலன் (Catholic Guardian) வெளிவரத் தொடங்கியது.

**1876 - 77**

இலங்கையின் சில பகுதிகளிலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் மழைக் குறைவின் காரணத்தால் கடும் வரட்சியும்; கொடிய பஞ்சமும் ஏற்பட்டன. "தாது வருட பஞ்சம்" எனப் பிற்காலத்தில் இத வழங்கலாயிற்று. வடமாகாணத்தைப் போலவே வடமத்திய மாகாணமும் பஞ்சத்தாற் பாதிக்கப்பட்டது. அம்மாகாண ஏஜன்டராயிருந்த டிக்ஸன் தனது ஆண்டறிக்கையில் (1878) புராதன குளங்களையும் நீர்த் தேக்கங்களையும் அரசாங்கம் பெருமளவிலே திருத்தியமைத்தாலன்றி எதிர்காலம் சுபிட்சமாக அயையாது" என்று எழுதினார். 1878-79 ஆம் ஆண்டு கிழக்குப் பிரதேசசத்தில் வரட்சியும் துன்பமும் ஏற்பட்டது.

**செல்வன் வி. சிவப்பிரியன்**
உப செயலாளர்
இந்து இளைஞர் கழகம்

# அறுபத்து மூன்று நாயன்மார்

01. அதிபத்தர்
02. அப்பூதியடிகள்
03. அமர்நீதி நாயனார்
04. அரிவட்டாயர்
05. ஆனாய நாயனார்
06. இசைஞானியார்
07. இடங்கழி நாயனார்
08. இயற்பகை நாயனார்
09. இளையான்குடிமாறார்
10. உருத்திர பசுபதி நாயனார்
11. எறிபத்த நாயனார்
12. ஏயர்கோன் கலிகாமர்
13. ஏனாதி நாதர்
14. ஐயடிகள் காடவர்கோன்
15. கணநாதர்
16. கணம்புல்லர்
17. கண்ணப்பர்
18. கலிய நாயனார்
19. கழறிற்றறிவார்
20. கழற்சிங்கர்
21. காரி நாயனார்
22. காரைக்கால் அம்மையார்
23. குங்கிலியகலையனார்
24. குலச்சிறையார்
25. கூற்றுவர்
26. கலிக்கம்ப நாயனார்
27. கோச் செங்கட் சோழன்
28. கோட்புலி நாயனார்
29. சடைய நாயனார்
30. சண்டேஸ்வர நாயனார்

31. சத்தி நாயனார்
32. சாக்கியர்
33. சிறப்புலி நாயனார்
34. சிறுதொண்டர்
35. சுந்தரமூர்த்தி நாயனார்
36. செருத்துணை நாயனார்
37. சோமசிமாறர்
38. தண்டியடிகள்
39. திருக்குறிப்புத் தொண்டர்
40. திருஞானசம்பந்தமூர்த்தி
41. திருநாவுக்கரசர்
42. திருநாளை போவார்
43. திருநீலகண்டர்
44. திருநீலகண்ட யாழ்ப்பாணர்
45. திருநீலநக்க நாயனார்
46. திருமூலர் இடையர்
47. நமிநந்தியடிகள்
48. நரசிங்க முனையர்
49. நின்றசீர் நெடுமாறன்
50. நேச நாயனார்
51. புகழ்சோழன்
52. புகழ்த்துணை நாயனார்
53. பூசலார் அந்தணர்
54. பெருமிழலைக் குறும்பர்
55. மங்கையர்க்கரசியார்
56. மானக்கஞ்சாற நாயனார்
57. முருக நாயனார்
58. முனையடுவார் நாயனார்
59. மூர்க்க நாயனார்
60. மூர்த்தி நாயனார்
61. மெய்ப்பொருள் நாயனார்
62. வாயிலார் நாயனார்
63. விறன்மிண்ட நாயனார்

**செல்வன் பு. ரவிஷாந்**
இந்து இளைஞர் கழகம்

# நவராத்திரி விழாக்காலம்

கலைமகள் பிரம்மதேவனின் சக்தியாகவும் போற்றப்படுவர். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை தூய உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே இருப்பள் இங்கு வாராது இடர் அலைமகள், மலைமகள், கலைமகள் இம் மூவருமே நவராத்திரி விழாவின் நாயகியராவர். அலைமகள் ஸ்ரீமத் நாராயணனின் மனைவியாகவும், மலைமகள் சிவபெருமானின் சக்தியாகவும், கலைமகள் பிரம்மதேவனின் சக்தியாகவும் போற்றப்படுவர். சிவனுக்கு ஒரு ராத்திரி அதுவே சிவராத்திரி. அன்னை சக்திக்கோ ஒன்பது இரவுகள் அதுவே நவராத்திரி. இந்த ஒன்பது இரவுகளையும் மூன்றாகப் பிரித்து முதல் மூன்று இரவுகளிலும் துர்க்காதேவியையும், நடு மூன்று இரவுகளிலும் இலக்குமி தேவியையும், இறுதி மூன்று இரவுகளிலும் சரஸ்வதி தேவியையும் வழிபடுவது இந்துக்களது மரபாகும்.

துர்க்காதேவி வீரத்தின் தலைவி. இவள் நல்லோருக்கு இடர் விளைவிக்கும் துட்டர்களைச் சம்ஹாரம் செய்பவள், இவளை மெய்யன்போடு வழிபட்டு வீரம் பெற்று வெற்றிக் கொடியேற்றிய தமிழ் மன்னர்கள் வரலாறுகள் உண்டு. இலக்குமி பொன்னரசி. செல்வத்திற்கு அதிபதி. தம்மை மெய்யன்போடு வழிபடுவோருக்கு செல்வத்தை அருளிச் செய்பவள். பொன்னிறமேனியவள், செந்தாமரையை ஆசனமாகக் கொண்டவள். சரஸ்வதி; கலைவாணி

என சகல கலைகளுக்கும் அதிபதி எண்ணும் எழுத்தும் தருபவள். கலைத்தேவி, பாரதி என்றும் அழைக்கப்படுவதோடு வீணையைக் கரங்களில் தரித்தவள். வெள்ளைப்பட்டு உடுத்தி வெண்டாமரைப் பூவில் அமர்ந்திருப்பவள். இவளது இன்னருள் பெற்ற கவியரசர்கள், புவியரசர்களோடு சரியாசனத்தில் இருந்தமை வரலாறு.

இம்மூன்று சக்திகளையும் முறைப்படி வணங்கி வீரம், செல்வம், கல்வி பெற உரிய காலமே இந்த நவ இரவுகளாகும். இம் மூன்று தேவியர்களுக்கும் மூலமாக இருப்பவள் அன்னை பராசக்தி. இவளே உலகில் உள்ள சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குபவள். அன்னை பராசக்தி பல நாமங்கள், ரூபங்களைக் கொண்டவள்.

பராசக்தியின் ஒரு அம்சமான அன்னை அபிராமியின் உபாசகராகிய அபிராமிப்பட்டர் சக்தி பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை நோக்குமிடத்து இவள் சிவனில் நின்றும் வேறு படாதவள் என்கின்றார். தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் என்பத உமாபதி சிவாச்சாரியார் கூற்றாகும். சிவமும் சக்தியும் சேர்ந்த வடிவமே அர்த்தநாரீஸ்வர வடிவமாகும் சைவர்களுடைய கருத்தின்படி இறைவன் ஞான வடிவினனாக தியானத்தில் வீற்றிருக்க அன்னை சக்தியே உயிர்கள் மேல் கொண்டு கருணை காரணமாக அகிலாண்டேஸ்வரியாக அணுக எளியவளாக நின்று இயங்குகின்றாள். உமாதேவி சக்தியின் ஒரு அம்சமே. சக்தியை முழு முதலாகக் கொண்ட சமயம் சாக்தமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த சிந்துவெளி நாகரிக காலத்திலே பெண் தெய்வ வழிபாடு இருந்துள்ளமைக்குச் சான்றுகள்உள. சிந்துவெளியிலுள்ள பெரிய இரு நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ ஆகிய இடங்களில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சிகளின்போது மண்ணாலான பெண் தெய்வப் பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக சேர்.ஜோன் மார்ஷல் தனது ஆராய்ச்சித் திரட்டுகளில் குறிப்பிட்டுள்ளார். இருக்கு வேதத்தில் இராத்திரி, உஷை ஆகிய பெண் தெய்வங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. சக்தி தத்துவம் பற்றி சுவேதாஸ்வதர உபநிடதம் கூறியுள்ளது. புராணங்களும் சக்தியின் பெருமை பற்றிக் கூறியுள்ளன. சக்தியின் பெருமை சக்திக்குரிய விரதங்கள். காயத்திரி

கவசம், காயத்திரி சகஸ்ரநாமம், சாக்த ஆகமங்கள், சாக்த மதக் கொள்கைகள், பற்றி தேவிபாகவதம் கூறுகின்றது. சங்க இலக்கியத்தில் சக்தி கொற்றவை என்றழைக்கப்படுகின்றாள்.

வட இந்தியாவிலுள்ள நவராத்திரி விழாவை "தசரா" என்றழைப்பர். புரட்டாதி மாதத்தில் தேவி பூசை செய்து ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், தேவி சூக்தம், துர்க்கை சூக்தம் போன்ற தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபாடு செய்வர். இவர்களது பூசையில் யந்திர பூசை, சக்கர பூசை முக்கியம் வாய்ந்தவை. இப் பூசையில் அதிக முக்கியத்துவம் பெண்பாலாருக்கு அளிக்கப்படுகின்றது. பெண் இம்சை, உடன் கட்டை ஏறல், பெண் மிருகங்களைப் பலியிடுதல் முதலியன விலக்கப்படுகின்றன.

இந்தியாவில் காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி ஆகியன வெகு சிறப்பு வாய்ந்த சக்தி தலங்களாகும். எமது நாட்டில் நயினை நாகபூஷணி அம்மன், மாத்தளை முத்துமாரி அம்மன், நல்லூர் வீரமாகாளி அம்மன், கொழும்பு பத்திரகாளி அம்மன் கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. நவ இரவுகளின் போது துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி வழிபாடு நிறைவு பெற்றதும் 10ஆம் நாள் விஜயதசமி என்றும் 'மானம்பூ' என்றும் அழைக்கப்படும் விழா கொண்டாடப்பெற்று வருகின்றது தேவியால் மகிடாசுர சங்காரம் நடந்த விழாவைச் சித்திரிக்க, அன்றைய தினம், வன்னிமரம் அல்லது வாழை மரத்தை ஆலய முன்றலில் நாட்டி, அதனை மகிடாசுரனானகப் பாவனை செய்து அம்மரத்தை வெட்டி வீழ்த்தும் முகமாக விழா எடுக்கப்படும். காட்டெருமை வடிவினான மகிடாசுவரன் தேவர்களைத் தன்புறுத்தியதோடு , மனிதர்களுக்கும் இன்னல்கள் பல புரிந்தவன். அவனை தேவி அழித்தொழித்ததன் தத்துவமும் ஒன்றுண்டு. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவன், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அறியாமை, மிருகத்தனம் ஆகிய மும்மலங்களையும் அறியாமை. மிருகத்தனம் ஆகிய துர்க்குணங்களையும் சக்தியை வழிபடுதலால் நீக்கிக் கொள்ளலாம் என்பதே இதன் தத்துவமாகும். விஜயதசமிக்கு முதல் நாள் ஆயுதபூசை இடம்பெறும். அன்று இரவு நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களைத் தேவி பாதத்தில் சமர்ப்பித்துப் பூசை செய்து ஆசி

பெற்று அடுத்தநாள் காலை அதனை உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் மரபாகும்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் தங்கள் புத்தகங்கள், எழுதுகோல்கள், கோவைகள் முதலியவற்றையும் தொழிலாளர்கள் தமது தொழிற் கருவிகளையும் கலைஞர்கள் தங்கள் இசைக் கருவிகளையும் தேவியின் பாதத்தில் சமர்ப்பித்து வழிபாடு செய்தல் மரபு. இவற்றைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

விஜயதசமியின் அடுத்த சிறப்பு அன்றைய தினம் சிறுவர், சிறுமியர்களுக்கு ஏடு தொடக்குதல் ஆகும். இதனை வித்தியாரம்பம் என்போம். புதிய கடைகள் , ஸ்தாபனங்கள் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கும் இந்நாள் மிகப் பொருத்தமான பொன்னாள் ஆகும். இந்த வகையில் மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய தேவியரே நவராத்திரி நாயகியர் ஆவர். இத்தேவியரை நவராத்திரி காலத்தில் மனமாரத் தியானித்த நாவாரப்பாடி , உளமாரப் போற்றி வழிபட்டு முறையே வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பெற்று உய்வோமாக.

**திருமதி சத்தியமாலினி ஜெகதீஸ்வரன்**
ஆசிரியர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# தாய் தந்தையைப் பேணல்

தாய் தந்தையைப் பேணிக் காக்க வேண்டும். அவர்கள் குற்றம் செய்தாலும் மூப்பூ காரணமாக ஏதாவது குறைகூறிக் கொண்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தக்கூடாது. அவர்கள் கூறுவது காதில் விழாதது போல் விட்டுவிட வேண்டும்.

அவர்கள் சொல்வதற்கெல்லாம் எதிர்சொல் கூறி சண்டையிட்டுக் கொண்டிருக்க கூடாது. அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி நாமும் துன்பம் அனுபவிக்கக்கூடாது. இது போன்ற சமயங்களில் மௌனம் நன்று.

வயதான காலத்தில் தாய் தந்தைக்குரிய துணிமணிகள், மருந்து இயன்ற அளவு ஊட்டச்சத்து நிறைந்த உணவு கொடுக்க வேண்டும்.

வயதானால் பலவித உணர்வுகள் உண்டாகும். அவர்கள் செய்கைகளுக்கும், பேச்சுக்களுக்கும் நமக்கு ஆத்திரமூட்டும். ஆனால் நாம் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். இதை நன்கு உணர்ந்த நமக்கு வயதாகும்பொழுது நாம் நமது பிள்ளைகளிடம் அவர்களுக்குத் துன்பம் தராது நடந்து கொள்ள வேண்டம்.

அவர்கள் இருக்கும்பொழுது சரியாகப் பராமரிக்காமல், இறந்தபின் ஊரார் மெச்ச செய்யும் ஆடம்பரச் செலவுகள் பலன் கொடுக்காது.

தாய் தந்தை வறுமையில் வாடும்போது அவர்களுக்கு தேவையானதைச் செய்யாமல், பிறருக்குத் தானம் கொடுத்தால் அது பலனளிக்காது.

தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் யாது?
ஆறுதரம் பூமியை வலம் வருதல், ஆயிரம் தடவை காசியில் குளித்தாலும், நூறு தடவை சேதுஸ்நானம் செயத்லும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம் தாயை பக்தி பூர்வமாக ஒரு தரம் வணங்கினாலே கிடைக்கும்.

**திரு. த. நிஷாந்தன்**
பெரும் பொருளாளர்
இந்து இளைஞர் கழகம்

23.06.2016 இல் நடைபெற்ற வருடாந்த சகஸ்ர (1008) சங்காபிஷேக விஞ்ஞாபனத்தில்









## கல்லூரியில் 2016 இல் இற்றைப்படுத்திய சமய நிகழ்வுகளின் சில பதிவுகள்...









## "நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகவே நீ மாற்றங் காண்பாய்"

மாபெரும் வரலாறாக சாதனை நவராத்திரி தின உரையிலிருந்து திகழும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்த நவராத்திரி காலத்திலே சரஸ்வதியின் அருட்கடாட்சமோ என்னவோ தெரியவில்லை நாம் இரண்டு சாதனையாளர்களத உரைகளது செவிமடுத்திருக்கின்றோம். அதில் ஒன்று பிரதம நீதியரசரின் உரை மற்றையது பேராசிரியர் Dr. ஜெயந்தி ஸ்ரீயின் சொற்பொழிவு. இவ்வுரைகள் நான் கூறும் விடயங்களுக்குச் சிறந்த அத்திபாரமாக அமையும் என்ற நம்பிக்கையோடு இவ்விடயத்துக்குள் நுழைகிறேன்.

ஒரு மனித வாழ்வியலில் அவன் இரண்டு தளங்களில் இயங்க வேண்டும். அதில் ஒன்று ஆன்மீகம். மற்றையது புரட்சி. புரட்சி என்பது வெறுமனே துப்பாக்கி முனைகளால் போராடுவது என்று அர்த்தமல்ல. அதில் சமூக அடக்குமுறைகள், சமூக அநீதிகள் நடைபெறும் போதெல்லாம் எம்மிடம் உருவாக வேண்டிய ஒரு உணர்ச்சி. இது இந்துவின் மைந்தனாகிய ஒவ்வொருவரிடமும் தாராளமாக உண்டு என்று கருதுகிறேன். சமூக அடக்குமுறை, சமூக விடுதலைக்கு வலுசேர்த்த பாடசாலை எங்கள் பாடசாலை என்ற வகையில் இந்து அன்னையின் பிள்ளைகள் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

இந்தச் சமூகத்தால் நாம் மீத்திறனானவர்கள் என்ற பார்வையிலேயே நோக்கப்படுகின்றோம். அந்தவகையிலே மீத்திறனானவர்கள் இறைவனால் படைக்கப்படுவதே சமூக நலனுக்காகத் தான் என்று நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டிய கட்டம் இது. இந்த மனித வாழ்வியலில் புரட்சி என்ற தளம் நான் சொல்லி இந்துவின் மைந்தர்கள் அறியத் தேவையில்லை. நான் அதை விடுத்து இரண்டாவது தளமாகிய ஆன்மீகத்துள் நுழைகிறேன். இன்று இதனுடைய குறைவு, தளர்வுப் போக்கு எம்மை ஏதோ ஒரு

வகையிலே வீழ்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றது என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை.

எமது கல்லூரிக்கு மூன்று சரித்திர நாயகர்கள் வருகை தந்தது யாவரும் அறிந்ததே. அகிம்சையின் வருகை, ஆன்மீகத்தின் வருகை, அறிவியலின் வருகை என்று எம்மால் போற்றப்படும் அந்த மூன்று மகான்களின் வருகைகளுள் இரண்டு மகான்களின் வாழ்வியலை எனது மேலுள்ள கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் என எண்ணுகின்றேன். ஆன்மீகத்தை ஒரு புரட்சித் தளத்தில் நிறுத்தியவர் சுவாமி விவேகானந்தர். நான் அவரை ஆன்மீகவாதியாகப் பார்க்க விரும்பவில்லை. சமூக விடுதலைப் புரட்சியின் வித்தாகப் பார்க்கிறேன். அவரது சிந்தனைகள் மனிதனை மனிதனாக்கும். உன்னை முதலில் புரிந்து கொள். நீ யார் என்பதை உன்னிடம் ஒரு கணம் கேள். அதற்கான பதிலை உன்னிடத்தில் தேடு. அன்பான பிள்ளைகளே நீங்கள் உங்களை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

சாதிக்கப் பிறந்தவர்கள் நீங்கள் என்பதை மறவாதீர்கள். மேலும் "நீ எதை எண்ணுகிறாயோ அதுவாகவே மாறுவாய்" என்ன ஒரு உன்னத மான கருத்து அதி உன்னதமான சிந்தனை உனது இலட்சியங்கள் சிறு வயதிலேயே உன்னுள் பட்டை தீட்டப்படவேண்டும். இதற்கு எமது அறிவியலின் வருகை, சமகாலத்தில் எம்மோடு வாழ்ந்த இப்போது எம்மைக் கண்ணீர்க் கடலிலே ஆழ்த்தி எம்மை விட்டுப் பிரிந்தாலும் எப்போதும் எம்மால் அறிவியலின் தந்தை எனப் போற்றப்படும் Dr. A.P.J. அப்துல்கலாம் அவர்களுடைய வாழ்க்கை ஒரு சான்று. அவர் மாணவர்களைக் கனவு காணுங்கள் என்றார். அவர் சொன்ன கனவு விவேகானந்தர், எதை நீ எண்ணுகின்றாயோ, அதுபோல நீ ஆவாய் என்பதன் மறுவடிவம். எனவே அன்பான மாணவர்களே உங்கள் இலட்சியங்களைக் கனவு காணுங்கள். நீ சாதிக்க வேண்டுமாயின் முதலில் செல்ல வேண்டிய இடம் உதைபந்தாட்டத் திடல் என்றார் சுவாமி விவேகானந்தர். ஏனென்றால் உடல் உறுதி கொண்டு வீரனாக நிற்கும் போது தான் உன்னால் சாதிக்கத் துடிக்கும் சாதனையாளர்களாக மாற முடியும். உன்னிடத்தை வீரத்தை

விளையாட்டினூடாக விதை என்றான். அது உனது உயரிய எண்ணங்களுக்கு வழி சமைக்கும்; மேலும் சுவாமி கூறினார் புதிய புரட்சிகரமான பாரதத்தைப் படைக்க நூறு புரட்சிகர சிந்தனை கொண்ட இளைஞர்கள் போதும் என்றார்.

மேற்படி சிந்தனைகளை எம்முள் விதைத்து எமது மண்ணை, எமது தேசத்தைப் புரட்சிகரமானதாகவும், உன்னதமானதாகவும் மாற்றி யாழ். இந்து அன்னையின் புகழை உலகெங்கும் பறைசாற்றி நிற்கப் புரட்சிகர இளைஞர்களாக அதாவது சுவாமி விவேகானந்தர் பாரதத்திற்கு கண்ட கனவு நம் தேசத்தில் நனவாக்கும் இளைஞர்களாக நாம் மாறுவோம். உன்னதமான தேசம் அமைப்போம் என உறுதி பூண்போமாக.

"இனியொரு விதி செய்வோம்
அதை எந்நாளும் காப்போம்"

**திரு. ந. பிரசாந்தன்**
*ஆசிரியர்*
*யாழ். இந்துக் கல்லூரி*

## விபூதி வாங்கும் முறை

கோவிலில் விபூதி வாங்கும்போது ஒற்றைக் கையை மாத்திரம் நீட்டி வாங்கக்கூடாது.

வலக்கையின் கீழே இடக்கையைச் சேர்த்து விபூதியை வாங்க வேண்டும்.

விபூதியை இடக்கையில் கொட்டி, அதிலிருந்து மறுபடி எடுத்துத் தரித்தல் கூடாது. வலக்கையில் பெற்றுக்கொண்ட விபூதியை அப்படியே நெற்றியில் தரிப்பது நலம். அவ்விதம் செய்ய இயலாவிட்டால் ஒரு சிறு தாளில் விபூதியை இட்டு, அதிலிருந்து எடுத்துத் தரிக்கலாம்.

வயதில் நம்மைவிட இளையவர் கைகளிலிருந்து விபூதி எடுத்துத் தரிக்கக்கூடாது. விபூதியை நம் கையில் இடச்செய்து அதிலிருந்துதான் எடுத்துத் தரித்துக்கொள்ள வேண்டும்.

குங்குமத்தை இளையவர் கைகளிலிருந்து எடுத்துத் தரிப்பதில் தவறில்லை.

### மன நிம்மதியுடன் வாழமுடியாத ஆறுவகை மனிதர்கள்

1. பொறாமை உடையவர்கள்
2. வெறுப்பு நிறைந்தவர்கள்
3. எதிலும் திருப்தி அற்றவர்கள்
4. எதற்கும் சிடுசிடுப்பற்றவர்கள்
5. எதையும் சந்தேகப்படுபவர்கள்
6. பிறரைச் சுரண்டி வாழ்பவர்கள்

**திரு. வி. ஜெனகன்**
*பெருஞ்செயலாளர்*
*இந்து இளைஞர் கழகம்*

# பகவத்கீதையைப் பற்றிய சில உண்மைகள்

01. கீதை என்றால் பொதுவாக பகவத்கீதையே ஆகும். கீதா என்னும் சம்ஸ்கிருத சொல்லிற்குப் பாடல் என்று பொருள். இந்தப் பாடல் இறைவனின் அவதாரமான பகவான் ஸ்ரீகிருஸ்ணரால் பாடப்பட்டதால் பகவத் கீதை (இறைவனின் பாடல்) என்று வழங்கப்படுகிறது. கீதை என்ற பெயரில் ஹம்ஸகீதை , அவதூத கீதை, அஷ்டாவக்ரகீதை என்ற சொல் பகவத்கிதையையே குறிக்கிறது.

02. கீதை 700 பாடல்களைக் கொண்டது; 18 அத்தியாயங்களை உடையது; மஹாபாரதத்தின் (பீஷ்ம பர்வத்தில் உள்ள 25 முதல் 42 வரையான அத்தியாயங்களைக் கொண்ட) ஒரு பகுதியாகும்.

03. கீதையில் உள்ள ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு யோகமாகக் க் கருதப்படுகின்றது. ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் இப்படியாக அவற்றிற்குப் பெயர்கள் உள்ளன. அவை அந்தந்த அத்தியாங்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

04. போர்முடகட்டில் அர்ஜுனனுக்கும் கிருஷ்ணரக்கும் இடையே நிகழ்ந்த சம்வாதமே பகவத்கீதை ஆகும். தங்களுக்குரிய அரசாட்சி மறுக்கப்பட்டு, கௌரவர்களால் பலவகைகளிலும் தீங்கிழைக்கப்பட்ட பாண்டவர்களில் ஒருவன் அர்ஜுனன். சமாதனாத்திற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவிய நிலையில், பாண்டவர்கள் கௌரவர்கள்மீது போர்தொடுக்க வேண்டிய கட்டாத்திற்கு கள்ளப் பட்டனர்.

05. இறைவனின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜு னனிடம் பேசும் போது, 'நான்' , 'எனது' என்னும் சொற்களைக் குறிப்பிடுகின்றார். எனவே, இவை பேருண்மையான இறைவனைக் குறிப்பவை.

06. பார்வையற்ற அரசனனும் கௌரவர்களின் தந்தையுமான திருதராஷ்டிரன், போரைக் காண்பதற்கு ஞானக்கண் அருளப்பெற்ற சஞ்சயனிடம், போர்முகட்டில் என்ன நடக்கிறது என்று கேட்டான். இந்தக் கேள்வியில் தான் பகவத்கீதை தொடங்குகிறது.

கௌரவர்களின் முதலாவனவனான துரியோதனன், ராஜகுருவான் துரோணசாரியாரை அணுகி இரண்டு பக்கங்களிலும் உள்ள வீரர்களைப் பட்டியலிடுவது, சேனைகளின் பலம் முதலியவற்றை விளக்கினான். பின்னர், இரண்டு பக்கங்களிலும் உள்ள வீரர்கள் சங்கினை ஊதி, போர் தொடங்கியதை அறிவித்தனர்.

07. அர்ஜு னனின் தேரோட்டியான ஸ்ரீகிருஷ்ணர் அவனத வேண்டுகோளுக்கு இணங்கி, தேரை இரண்டு படைகளுக்கும் நடுவில் நிறுத்தினார்; தனது பாட்டனாரான பீஷ்மரையும், ஆசாரியான துரோணரையும் கண்ட அர்ஜுனன், அவர்களுடன் சண்டையிட வேண்டுமே என்ற எண்ணத்தில் மிகவும் வருந்தி மதிமயங்கிவிட்டான்.

மிகவும் தளர்ந்து விட்ட அவன் கிருஷ்ணரிடம், இந்தப் போர் நாட்டைப் பாழாக்கிவிடும், சமூகத்தை அழித்துவிடும் எனவே, போர்புரிவது நன்மை தராது என்று கூறி தேரின் தட்டில் உட்கார்ந்துவிட்டான். மேலும், எதைச் செய்தால் நன்மை அடைய முடியும் என்பது பற்றி ஸ்ரீகிருஷ்ணரின் அறிவுரைகளை நாடுகின்றான். இதற்குப் பதிலாக ஸ்ரீகிருஷ்ணர் கூறியவையே பகவத்கீதையாகும்; அதை மஹரிஷி வேதவியாசர் மஹாரிஷி வேதவியாசர் மஹாபாரதத்தின் ஒரு பகுதியாக நமக்கு வழங்குகின்றார்.

08. க்ஷத்திரியனான அர்ஜுனனுக்குப் போர் செய்வது தர்மம் என்பதை ஸ்ரீகிருஷ்ணர் எடுத்துரைக்கின்றார். தனத தளர்ச்சியையும், குழப்பங்களையும் நீக்கிவிட்டுப் போர்புரிவதற்கு ஆயத்தமாகும்படிக் கூறுகின்றார்.

முதரில் போரிடுவதற்கு முடிவு செய்துவிட்டுப் பின்னர் தர்ளச்சியடைவதை, வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்ட மனம் வாழ்க்கையின் சிக்கல்களைச் சந்திக்கும்போது சக்திகயிழந்து, உற்சாகமிழந்த தளர்ந்து விடுவதுடன் ஒப்பிடலாம்.

ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனை மென்மையாகக் கடிந்து கொண்டார்; பின்னர், அவனது சந்தேகங்களையும் குழப்பங்களையும் போக்கினார்.

09. எல்லாவற்றிற்கும் உள்ளிருக்கும் ஆத்மாவிடமிருந்து வெளிப்படும் சக்தி, ஞானம் இவற்றின்மீது ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனின் கவனத்தைத் திருப்புகிறார்.

10. ஹரியானாவில் புதுதில்லியிலிருந்து 120கிமீ. தொலைவில் உள்ள குருக்ஷேத்திரத்தில் இந்தப் போர் நடந்திருக்க வேண்டும். அதனருகில் மஹாபாரத்துடன்ட தொடர்புடைய பல இடங்கள் உள்ளன.

11. குருக்ஷேத்திரம் நமது வாழ்க்கை களத்தையும், நற்சக்திகள் பாண்டவர்கள்களையும் , தீயசக்திகள் கௌரவர்களையும் குறிக்கும் உருவமாகக் கொள்ளலாம்.

12. தன்னலமிக்க, தன்னலமற்ற செயல்களின் விளைவுகள், தியானத்தின் முறை, இறைவனிடம் பக்தி, ஆசைகளையும் கோபத்தையும் அடக்கும் வழி, ஆன்மீகம், நற்பண்புகள் முதலிய பலகருத்துக்களை கீதை விளக்குகிறது.

**செல்வி. அ. காயத்திரி**
ஆசிரியர்
யாழ். இந்துக் கல்லூரி

# சொற்பொழிவாளர்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்து இளைஞர் கழகத்தின் அழைப்பின் பெயரில் எமது சமய நிகழ்வுகளுக்கு சொற்பொழிவு நிகழ்த்திய பெரியயோர்க்ள் அனைவருக்கும் எமது கல்லூரி சார்பாகவும், கழகத்தின் சார்பாகவும் என்றென்றும் நன்றி உடையவர்கள்.

பேராசிரியர் S. ஸ்ரீ சற்குணராஜா
– பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்

கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்
– தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்

திரு. ச. லலீசன்
– பிரதி அதிபர், கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

சைவப்புலவர் திரு. மா. கணநாதன்
–சொற்பொழிவாளர்

திரு. ஆ. நவநீதகிருஷ்ணன்
– ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி

திரு. கு. பாலசண்முகன்
– விரிவுரையாளர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

திரு. ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ
– சட்டத்துறை மாணவன் யாழ். பல்கலைக்கழகம்

திரு. ஜி. சஜீவன்
– தொழில்நுட்பக்கல்லூரி மாணவன், யாழ்ப்பாணம்

இந்து இளைஞர் கழகம்
யாழ். இந்துக் கல்லூரி

நன்றி

# சரஸ்வதியின் லட்சணம்

சரஸ்வதி இந்து சமயம் வணங்கும் முக்கியமான பெண்கடவுளரில் கடவுளில் ஒருவர் படைப்புக் கடவுளான பிரம்மாவின் சக்தியாகக் கொள்ளப்படுகின்றார். சரஸ்வதி என்னும் சமஸ்கிருதச் சொல் நகர்தல், ஆற்றொழுக்காகச் செல்லல் அகிய பொருள்களைக் கொண்ட ஸ்ர்என்னும் வேரின் அடியாகப் பிறந்தது. இருக்கு வேதத்தில் சரஸ்வதி ஒரு ஆறாக உருவகிக்கப்பட்டு உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. நீர், இந்துக்களின் பார்வையில் வளமை, படைப்பு, தூய்மைப்படுத்தல் முதலியவற்றைப் பிரதிநிதிப் படுத்துகிறது. இதனால் தான் சரஸ்வதியும் இத்தகைய கருத்துக்களோடு தொடர்பு படுத்தப் பட்டுள்ளாள்.



'பேச்சுக் கலையின் தேவதை' எனப் பொருள் படும் 'வக் தேவி' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றாள்

இந்துக்கள், சரஸ்வதி யைக் கல்விக் கடவுளா கவும், எல்லாக் கலைகளுக்கும் தலைவியாகவும் கருதுகிறார்கள். அறிவு, ஒளியாகவும், அறியாமை இருளாகவும் கருதப்படு கின்றது. இதனால் தான் சரஸ்வதியை வெண்மை நிறத்தோடு தொடர்பு படுத்துகின்றார்கள். வெள்ளை ஆடை அணிந்தவளாகவும், வெள்ளைத் தாமரைப் பூவில் அமர்ந்திருப்பவளாகவும், சரஸ்வதியைச் சமய நூல்கள் வர்ணிக் கின்றன.

சரஸ்வதி எனும் பெயரில் இராகம் ஒன்றும் உள்ளது.

**சமயங்கடந்த தெய்வம்**
**இந்து மதத்தில்**

இந்து மதமாக மாற்றம் பெற்ற சைவம், வைணவம், சாக்தம் காணாபத்தியம், சௌரம் முதலியவற்றில் கலைமகள் வழிபாடும் பெருமையும் கூறப்படுகின்றது. 'அனைத்து உயிர்களின் நாவினிலும் கலைமகள் வீற்றிருக்கின்றாள் என்கிறது கந்தபுராணம்.'

**சமண மதத்தில்**

சுருதிதேவி என்றும், வாக்தேவி என்றும் சமணர்கள் சரஸ்வதியை வணங்குகின்றார்கள். ஜினி ஐஸ்வர்யா என்றும், ஜினவாணி என்றும் அழைப்பதுண்டு. ஆபுத்திரன் என்பவன் கலைமகளிடமிருந்து அட்சய பாத்திரம்பெற்ற செய்தி பௌத்த புராணமான மணிமேகலையில் உள்ளது.

**பௌத்த மதத்தில்**

மகா சரஸ்வதி, ஆர்ய சரஸ்வதி, வஜ்ரவீணா சரஸ்வதி, வஜ்ர சாரதா, வஜ்ர சரஸ்வதி என ஐந்து பெயர்களில் சரஸ்வதி பௌத்தர்களால் வணங்கப்படுகிறார்.

எனவே டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் சரஸ்வதியை கலைமகள் சமயங் கடந்த தெய்வம் எனக் குறிப்பிடுகின்றார்.

**சரஸ்வதியின் தோற்றமும் குறியீடும்**

அழகிய தோற்றம் கொண்டவளாகவும், நான்கு கைகளைக் கொண்டவளாகவும், வெள்ளை உடை உடுத்து, வெண் தாமரையில் அமர்ந்திருப்பவளாகவும், நான்கு கைகளில் ஒன்றில் செபமாலையும், மற்றொன்றில் ஏடும், இருக்க முன் கைகள் இரண்டிலும் வீணையை வைத்து மீட்டுபவளாகச் சரஸ்வதி உருவகப்படுகிறாள். செபமாலை ஆன்மீகத்தையும், ஏடு அறிவையும், வீணை கலைகளையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது.

கலைமகளின் கையிலிருக்கும் ஜெபமாலைக்கு அட்சமாலை என்று பெயர். இம்மாலை சமஸ்கிருதத்தின் எழுத்துக்களின்

எண்ணிக்கைக்கு சமமாக ஐம்பத்தொன்று மணிகளை உடையதாக உள்ளது. மொழி வடிவில் இம்மாலை இருப்பதாகக் கூறுகிறார்கள். கலைமகளின் வாகனமாக அன்னப் பறவை உள்ளது.

**சரஸ்வதிக்கென நூல்கள்**

சரஸ்வதியைப் பற்றி தமிழில் சரஸ்வதி அந்தாதி எனும் நூலை கம்பரும், சகலகலாவல்லிமாலை என்ற நூலை குமரகுருபரரும் இயற்றியுள்ளார்கள்.

**சரஸ்வதியின் தனி ஆலயங்கள்**

தமிழ்நாடு கூத்தநூரில் தனி ஆலயம் உள்ளது.
கர்நாடகாவில் சிரிங்கேரி, கடக் எனும் இடங்களில் தனி ஆலயம் உள்ளது.

ஆந்திராவில் பசர எனும் இடத்தில் தனி ஆலயம் உள்ளது.
காஷ்மீரின் தக்த்-இ-சுலைமான் மலையில் 'சர்வஜ்ன பீத' என்றழைக்கப்படும் பழங்காலத்திய ஆலயம் உள்ளது.

தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகர புரத்தில் தனி ஆலயம் உள்ளது. கவிமணி அவர்களால் வழிபடப் பட்டவள் இந்த அம்பிகை, திபெத், நேபாளம், இந்தோனேசியா மற்றும் ஜப்பான் நாடுகளிலும் இந்த தெய்வத்தின் மீதான வழிபாடு நடைமுறையில் உள்ளது. இங்கு 'பென்சய்-டென்' எனும் பெயரில் வழங்கப்படுகிறாள்.

நன்றி இணையம்

**திரு. ஆ. ந. தேவசகாயம் ஜெயகுமார்**
பெருந்தலைவர்
இந்து இளைஞர் கழகம்

## அவரவர் விரும்பிய வண்ணம் எல்லாம் தருபவள் அபிராமி

தனம் தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

*ஸ்ரீ அபிராமி அம்பாள் கடைக்கண் பார்வை கிருபா கடாட்சமானது இச்சா சக்தி ஸ்வரூபிணியான மஹா லட்சுமியாக இருந்து சகல செல்வங்களையும், ஞானசக்தி ஸ்வரூபிணியான மஹா சரஸ்வதியாக இருந்து கல்வி அறிவையும், கிரியாசக்தி ஸ்வரூபிணியாக இருந்து கல்வி அறிவையும் க்ரியா சக்தி ஸ்வரூபினியான துர்க்கா பரமேஸ்வரியாக இருந்து தளர்ச்சியில்லா உறுதியான மனத்தையும், தெய்வ வடிவையும் மனத்தில் கள்ளம் கபடமற்ற தூய்மையையும் வணங்கும் அடியார்களுக்கு அவரவர் விருப்பப்படி எல்லா நலன்களையும் அருளும் மேகங்கள் போன்று தருபவள் அன்னை அபிராமியாவாள்.*

** நவராத்திரி விழாவினை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்து இளைஞர் கழகத்தினால் நாவண்மைப் போட்டி (தங்கப்பதக்கம்)*

## போட்டிகள்

**நவராத்திரி விழாவை முன்னிட்டு யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்துஇளைஞர் கழகத்தினால் நாவண்மைப் போட்டி, (தங்கப்பதக்கம்) கோலப்போட்டி, மாலை கட்டும் போட்டி, சகலகலாவல்லி (பாவோதல்) போட்டி மேற்படி போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு நடைபெற்று தங்கப்பதக்கமும், பாராட்டுப்பத்திரமும் விஜயதசமி விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேற்படி போட்டியை திறம்பட நடாத்தி ஒத்துழைத்த கல்லூரி ஆசிரியர்களுக்கும் நடுவர்களாக கடமையாற்றிய பிற கல்லூரி ஆசிரியர்களுக்கும் இந்து இளைஞர் கழகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

# கௌரவிப்பு நிகழ்வுகள்

- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிவதொண்டர் அணியினை அங்குராப்பணம் செய்து வைத்து, சிவதொண்டர் அணியினருக்கு வேண்டிய சமய நூல்களையும் சால்வையினையும் வழங்கி கௌரவித்த அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மதிப்பிற்குரிய கந்தையா நீலகண்டன் ஐயா அவர்களுக்கு இந்து இளைஞர் கழகம் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவித்தது.

- பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த வைத்தியக்கலாநிதி பரமேஸ்வர ஐயர் அம்பிகாபதி அவர்கள் கழகத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்புச் செய்தபோது இந்து இளைஞர் கழகம் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவித்தது.

- தமிழ் நாட்டில் (இந்தியா) இருந்து வருகை தந்த பேராசிரியர் திருமதி ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அம்மையார் யாழ். இந்துக் கல்லூரியின் பிரதான பிராத்தனை மண்டபத்திற்கு வருகை தந்து குழந்தைகளுக்கு அறிவுரை கூறிய அம்மையாருக்கு இந்து இளைஞர் கழகம் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவித்தது.

## இந்து இளைஞர் கழகத்தின் ஊடாக சிவஞான வைரவப் பெருமானின் சங்காபிஷேகத்துக்கு நிதி அன்பளிப்புச் செய்த அடியார்களின் விபரம் - 2016

| | அடியார்களின் பெயர் விபரம் | வரவுத் தொகை |
|---|---|---|
| 1 | செல்வி த. செல்லத்துரை | 1000 |
| 2 | திரு. வ. தவகுலசிங்கம் | 1000 |
| 3 | திரு. ஐ. தயானந்தராஜா (அதிபர்) | 1000 |
| 4 | திருமதி ம. செல்வரத்தினம் | 1000 |
| 5 | திரு. சி. ரகுபதி (அரிசி 50 கிலோ) | 3900 |
| 6 | திரு. சி. ஜெயபாலன் | 1500 |
| 7 | திரு. வி. தயாபாலன் | 5000 |
| 8 | திரு. சி. சிவராஜா (வர்த்தக ஆசிரியர்) | 4000 |
| 9 | திரு. க. நந்தகுமார் (அலுவலக அலுவர்) | 1500 |
| 10 | திரு. கு. பகீரதன் | 2000 |
| 11 | திரு. ப. ரகுமார் | 2000 |
| 12 | திரு. சு. தயானந்தன் (யாழ் மத்திய கல்லூரி) | 1000 |
| 13 | திரு. இ. குமரன் | 3500 |
| 14 | திருமதி சு. சுகந்தன் | 1000 |
| 15 | திரு. ந. விபுலன் | 2000 |
| 16 | திரு. செ. திருமாறன் | 1000 |
| 17 | திருமதி ஐ. குமாரதாஸ் | 1000 |
| 18 | திருமதி க. வாமதேவன் (பழவகை) | 500 |
| 19 | திரு. ல. நிசாந்தன் | 10 000 |
| 20 | திரு. சி. மயூரன் | 1000 |
| 21 | திரு. ச. சஜீவ் | 1000 |
| 22 | திருமதி ர. யாழினி | 500 |
| 23 | திரு. சொ. ஹரிசங்கர் | 500 |
| 24 | திருமதி கோ. திருமகள் | 1000 |
| 25 | கல்லூரி மாணவ முதல்வர்கள் | 2000 |
| 26 | National Science Foundation (E. Sri Mathan Sir) Research | 400 |
| 27 | திரு. வி. ஜெனகன் | 1000 |
| 28 | திரு. தே. ஜெயகுமார் | 2500 |
| 29. | பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 87188 |
| 30. | பழைய மாணவர் சங்கம் | 87101 |

## சிவஞான வைரவப்பெருமானின் சங்காபிஷேகத்திற்கு பொருளுதவி புரிந்த அடியார்கள் விபரம் - 2016

| பெயர் | அன்பளிப்புப் பொருள் |
|---|---|
| திரு. க. சுவாமிநாதன் | 1 மூடை நெல், Shopping Bag |
| திருமதி ம. லோகேஸ்வரசர்மா | 50 தேங்காய், பலாப்பழம் |
| திரு. க. பரமேஸ்வரன் | 45 தேங்காய் |
| திருமதி ச. ஜெகதீஸ்வரன் | 200 வெற்றிலை |
| திரு. தி. சிவகுமாரன் | வெற்றிலை |
| திரு. த. நிஷாந்தன் | 500 வாழையிலை |
| திருமதி ச. காயத்திரி | பஞ்சாராத்தி, ஒற்றைத் தீபம் |
| திரு. நா. சிவச்சந்திரன் | 1 குலை வாழைப்பழம்,<br>50 தலை வாழையிலை |
| திரு. வ. கணேசலிங்கம் | 3 கிலோ வெங்காயம் |
| திரு. க. ரவிக்குமார் | பலாப்பழம் |

- **அர்ச்சனைப் பொருட்களைக் கல்லூரி மாணவர்களும் தந்துதவினார்கள்.**

*Dr. Parameswarayier Ambikapathy*
(Retired Primary care Physician)
Hon. Secretary BMA south Essex Division (UK)

**அவர்கள் இந்து இளைஞர் கழகத்திற்கு 194937/- ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்களை தந்துதவியமைக்கு கழகம் சார்பாக மனப்பூர்வமான நன்றி.**

## யாழ் இந்துவின் நவமலர் மணங்கமழ பங்களித்த உங்களுக்கு கழகத்தின் உளங்கனிந்த நன்றி

- 2016ஆம் ஆண்டின் நவமலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகள் வழங்கிய சிவஞானவைரவர் சிவாச்சாரியருக்கும் பெரியார்களுக்கும்

- இந்து இளைஞர் கழகத்தின் வளர்ச்சிக்கு உயர்ச்சிக்கு வளமானவாழ்வுக்கும் உறுதுணையாக உள்ள அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பழைய மாண சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கல்விசாரா ஊழியர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும்

- நவமலரை குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்துதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும்

- இன்னும் பல வழிகளிலும் நவமலரின் வரவுக்கு பங்களித்த எமது கல்லூரி ஆசிரியர் வி. தயாபாலனுக்கும் ராஜா கிறீம் கவுஸ் உரிமையாளருமாகி திரு. சி. சண்முகாநந்தன் மற்றும் ஏனைய அன்புள்ளங்கள் அனைவரிற்கும்

- முகப்பு அட்டையையும், சிவஞான வைரவர் படத்தையும், இறுவட்டுப் படத்தையும் வடிவமைத்துத் தந்த கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன் ம. சுதேஸ் அவர்களுக்கும்

எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்துக்கல்லூரியின் சிவஞானவைரவப் பெருமானின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் பணிகின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

இந்து இளைஞர் கழகம்
11.10.2016

# கல்லூரி கீதம்

வாழிய யாழ் நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தெனறும்


கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலை நிமிர் கழகமும் இதுவே!

எவ்விடம் மேகினும் எத்துயர் நேரினும்
எம்மண்ணை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல்லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியிவ் வாழிய நீடு.


யோகர் சுவாமிகள்


செல்லப்பா சுவாமிகள்


குடைச் சாமியார்